2005 மார்ச் 24]

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, சா. அய்யம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட மேலகருங்காடு பகுதிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், அய்யம்பாளையம் ஊராட்சியில் மேலகருங்காடு, கருங்காடு குடியிருப்பின் ஒரு பகுதியாக உள்ளது. கருங்காடு குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போதைய மக்கள்தொகைக்கு இது போதுமானது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

தென் மாவட்டங்களில் நீல நாக்கு நோயால் ஆடுகள் இறப்பு–விவசாயிகளுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சோ. இராசேந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தென் மாவட்டங்களில் சென்ற ஆண்டு பெய்த மழையின் காரணமாக ஆடுகள் ஆயிரக்கணக்கில் நீல நாக்கு நோய் தாக்கி இறந்ததால்

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பருவ மழைக் காலங்களில் நீல நாக்கு நோய் ஆடுகளைத் தாக்கும். இந்நோய்க்கு எதிரான தடுப்பூசி இல்லாததால் நோய்த் தடுப்பு முறைகளை கால்நடை வளர்ப்போர் கையாள வேண்டும்.

சென்ற ஆண்டு பெய்த பருவ மழையின் காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு நீல நாக்கு நோய் தாக்கியுள்ளது:

வ.எண்	மாவட்டம்	இறந்தவை
1.	*திருநெல்வேலி*	*8,939*
2.	*மதுரை*	*579*
3.	*தூத்துக்குடி*	*6,222*

நோய்த் தடுப்பு நடவடிக்கையாக பூச்சிக்கொல்லி மருந்து அடிக்கப்பட்டு, பட்டிகளின் அருகிலுள்ள புதர்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நோய் பட்டிகளின் அருகில் தேங்கியுள்ள தண்ணீர் மூலம் பரவுவதால் தண்ணீர் தேங்கவிடாமல் ஆடு வளர்ப்போருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இத்துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோய்த் தாக்கி இறந்த ஆடுகளுக்கு இழப்பீடு கொடுக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி நிவாரணத் தொகையினைப் பெற சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோரப்பட்டனர். அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரேரணைகளை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பி அதன்பேரில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2005 மார்ச் 24]

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் விவரம் கோரப்பட்டுள்ளது, அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரேரணைகளை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பி, அதன்பேரில் குறித்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நிவாரண நிதியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஆடுகளை பாதிக்கக்கூடிய நீல நாக்கு நோய்க்கு உண்டான தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்று கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் எல்லாம் குறிப்பிடுகின்றார்கள். புதிய தடுப்பூசி மருந்து ஏதும் தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தால் ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். அதேபோல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குப் பதில் சொல்லட்டும், அடுத்து கேளுங்கள்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலேயே இதுவரை நீல நாக்கு நோய்க்குத் தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. தற்போது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களது சீரிய ஆட்சியில் நீல நாக்கு நோய்க்கான புதிய தடுப்பூசி மருந்து தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது களப் பரிசோதனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இம்மாமன்றத்திற்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல ஆடுகள் இறக்கும் சமயத்தில் தற்போது நிவாரண நிதி குறைந்தபட்சம் ரூ.300 என்ற அடிப்படையில் அரசு வழங்கி வருகிறது. இந்த நிவாரணம் என்பது, போதுமான அளவிற்கு இல்லை. ஆட்டினுடைய தற்போதைய விலை மதிப்பு என்பது கிட்டத்தட்ட 4,000 ரூபாய் வரை இருக்கிறது. ஆகையினால், இந்த நிவாரணத் தொகையைக் கூட்டி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் 1997 ஆம் ஆண்டு நீல நாக்கு நோயால் இறந்த ஆடுகளுக்கு, ஆடு ஒன்றுக்கு ரூ.300 மட்டுமே நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இயற்கை இன்னல்களால் இறந்த ஆடு ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் இழப்பீடு வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதே அளவு நிவாரணத் தொகை நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்டு இறந்த ஆடுகளுக்கும் வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 265 முதல் 267 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 172 முதல் 174 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-05

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.